சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஜ.இ.1)துறை**

**அரசாணை (டி) எண் 114** **நாள்: 31.07.2014**
**ஜய, ஆடி 15,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

"தமிழ்நாட்டில் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான ராமநாதபுரம் மாவட்டம், ராமநாதபுரம் மற்றும் திருவாடானை வட்டங்களில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம், அதாவது National Investment and Manufacturing Zone சுமார் 6,525 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மண்டலத்திற்கான விரிவான திட்ட அறிக்கை நடப்பாண்டில் தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பணிகளை விரைவில் மேற்கொள்ள எனது தலைமையிலான அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ளும்".

2. மேற்கண்ட தொழில் வளர்ச்சி திட்டம் மற்றும் தொடர்புடைய பணிகளை மைய அரசின் தேசிய உற்பத்தி கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளவும், இத்திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ச. வி. சங்கர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி –இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
நகல்
தொழில் (வசெதி) துறை, சென்னை – 600 009.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31-7-2014
பிரிவு அலுவலர்